கோட்டையூரில் சமாதி கொண்டருளும்

விராலிமலை

எச்சில் பொறுக்கி

ஆறுமுக சுவாமிகள் பதிகம்

பாடியவர்

புலவர் சோம. இளவரசு

ஏழாம் ஆண்டு குருபூசை வெளியீடு

30—5—88

வழங்குவோர் :

வெற்றி குரூப் நிறுவனங்கள்

சென்னை, சிதம்பரம், மதுரை, திருச்சி, கோவை.

முன்னுரை

மனிதனை மனிதனாக வாழச் செய்வது சமயம். காலப் போக்கில் கண்மூடிப் பழக்கங்கள் சமயத்தில் கலந்துவிட்டன. அதனால் சமயமே அபினாகிவிடாது.

மனிதனுக்கு இப்போது எந்தக் குறையும் இல்லை. விஞ்ஞானம் குறைவிலா நிறைவாக வாழ வழி செய்துள்ளது. என்றாலும் அவன் மனத்தில் மட்டும் அமைதி இல்லை. எங்கே அமைதி கிடைக்கும் என்று நாளும் அலைகின்றான். அந்த அமைதியைத் தருவது ஆலயமே.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' — இது உணர்ந்து பாடிய அறநெறிப் பாட்டு. ஆலயங்களுக்குச் சென்றால் — ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள வழிபட்டால் அமைதி கிட்டும்.

கோட்டையூருக்கு அருகில் ஒரு புதிய சமாதி எழும்பியுள்ளது. அங்கே சமாதியான சித்தர், எச்சில் பொறுக்கி ஆறுமுக சுவாமிகள் அவர்கள். அவரின் திருவிளையாடல்களை நன்கு அறிந்தவர் என் நண்பர் திரு. அழ. சிதம்பரம் அவர்கள். அவரால் சுவாமிகளை வணங்கும் பேறு எனக்கும் கிடைத்தது.

ஆறுமுக சுவாமிகள் மக்களின் நன்மைக்காக வாழ்ந்த மகான். நமக்கு பிறப்பதும் இறப்பதும் தெரியாது. ஆறுமுக சுவாமிகளோ இறப்பினை அறிந்த வித்தகர். "வைகாசித் திங்கள் விசாக

நாளில் முக்தி பெறுவேன்; கோட்டையூரில் இன்ன திசையில் இத்தனை அடி ஆழத்தில் ஒரு குழி உள்ளது. அங்கே என்னைச் சமாதியில் வை. நான் சமாதி கொண்ட இடத்தைச் சுற்றி நகரம் தோன்றும்; காடு நாடாகும்'' என்று அழ. சிதம்பரத்திடம் கூறினார்கள். அதுபோலவே முக்தியடைந்தார்கள். அவர்கள் சொன்னவாறே குறிப்பிட்ட இடத்தில் குழி இருந்தது. சமாதி எழுப்பப் பெற்றது. சமாதிக்கு அருகில் மிகப் பெரிய நகரம், 'சக்திநகர்' என்ற பெயரில் உருவாகி வருகின்றது. ஞானியர் வாக்கு என்றும் பொய்க்காது.

சுவாமிகளின் இரண்டாம் ஆண்டுக் குருபூசையின் போது அவர்கள் பெயரால் பதிகம் பாடினேன். இப்போது அது எல்லாருக்கும் பாராயண நூல். தொடர்ந்து பாட வேண்டும் என்பது ஆசை. அது என் வசத்திலா இருக்கிறது?

ஆறுமுக சுவாமிகளின் அருளால் ஐந்தாம் ஆண்டுக் குருபூசை விழாவில் மற்றுமொரு பதிகம் பாட வாய்ப்புப் பெற்றேன்.

என்னிடத்தில் பற்றுக்கொண்ட திரு. அழ. சிதம்பரம் பாடுமாறு பணித்தார். எவ்வாறு மறுப்பேன்? அவரால் இரண்டு பதிகங்களும் ஒரு சேர உருவாகின்றது.

கோட்டையூர்,

அன்பன்,
சோம. இளவரசு

இனியநண்பர் இளவரசு

ச. மெய்யப்பன் எம்.ஏ.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பாமாலை பாடிய பாவலர் இளவரசு அவர்கள் புகழ்மிக்க அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புகழ் பூத்த பேராசிரியராகத் திகழ்ந்தவர். உடை நலமும் நடை நலமும் வாய்க்கப் பெற்றவர். பேச்சாற்றலிலும், எழுத்தாற்றலிலும் வல்லவர். விரைந்து கவிதை இயற்றுவதிலும் செயல் முடிப்பதிலும் விற்பன்னர். சிறந்த இலக்கண வல்லுநர்: இலக்கணத்தைச் கற்பிப்பதிலும் தனித்திறன் சான்றவர்.

இவர் படைத்த 'இலக்கண வரலாறு' இவர் தம் மதிநுட்பத்தை, அறிவாற்றலை, புலமை நலத்தைத் தமிழ் நாட்டிற்கு அடையாளம் காட்டிற்று. இளவரசு ஒரு நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், பேராசிரியர்.

எல்லோரும் எளிதில் பயில ஓத இனிய பாடல்களை இதில் பாடியுள்ளார். ஈடுபட்டுப்பாடியுள்ளார். மனதில் பதியும்படியும் என்றும் திரும்பச் சொல்ல வாய்ப்பாகவும் எளிய சொல் எளிய சந்தம் அமைத்துப் பலர் நாவில் தவழும்படி பாடிய கவிஞர் இளவரசு என்றும் நம் நினைவில் நிற்பார். அவரால் புகழப் பெற்ற மகான் புகழும் பாடல் மூலம் பரவி பலருக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் நல்வாழ்வையும்

நல்கும். தூய முனிவரின் சான்றோரின் சால்புகள் ஆசிகள்வாழ்த்துக்கள் வையம் வளமுடன் வாழவழி காட்ட வாழ்த்துகிறேன்.

இவருடன் பழகிய முப்பது ஆண்டுகள் (1956-1986) மகிழ்ச்சி மிக்கவை. மறக்க முடியாதவை. எங்கள் குடும்பத்திற்கும் நிறுவனங்களுக்கும் இவர் பாடிய மங்கல வாழ்த்துப் பாடல்கள் பல. நாங்கள் நினைந்து நினைந்து எண்ணி எண்ணி மகிழத் தக்கவை. இவரது சிவந்த நிறமும் மலர்ந்த முகமும் கூரிய மூக்கும் ஒளி படைத்த கண்களும் குரல் வளமும் எவரையும் எளிதில் ஈர்க்கும் தன்மையன. எவர் உள்ளத்தையும் தன்பால் கவரும் கள்வர். ஏற்ற கருத்தை எடுத்துரைப்பதில் ஈடு இணையற்றவர். இவரைப் போல கண்ணதாசன் கவிதைகளைச் சுவைத்தவர் இலர்.

இவர் பாடல்களைக் கேட்போர் மனங்கொளப் பாடுபவர். நுண்ணறிவோடு நூலறிவு மிக்கவர். இவரோடு ஆடி ஓடிய நாட்களும் கலந்துரையாடிய காலங்களும் கவிதையைச் சுவைத்த நேரங்களும் என்றும் பசுமை நிறைந்த நினைவுகள். ஆய்வாளராய் சிந்தனையாளராய், இவர் பற்றிய நினைவலைகள் ஒன்றா, இரண்டா? எளியோர்க்கு ஓடி உதவும் இயல்பினர். நல்ல உணவு, நல்ல உடை, நல்ல கவிதை, நல்ல நண்பர்களை நாளும் நேசித்த நண்பர் இளவரசர்.

ஆறுமுகசாமி பதிகம

கொண்டாடக் கொண்டாடக் குறையெல்லாம்
மாய்க்கின்ற குருவாக வந்த ஞானி!
குறையுடைய விராலிமலை முருகனின் சாபத்தைக்
கொண்டுவாழ் வித்த மேலோன்!
பண்டார மானாலும் பார்ப்பவர் தமக்கெலாம்
பரமனாய் வந்த யோகி!
பழமான முனியாகி வாராகி தானாகிப்
பாராள வந்த நம்பி!
அண்டினார் எல்லாரும் அருளமுதம் உண்ணவே
அவனியில் வந்த ஆண்டி!
அருளாலும் பொருளாலும் அன்பரை வாழ்விக்கும்
ஆறுமுக சாமி ஐயா! 1

எச்சிலிலை பொறுக்கியென எல்லோரும் சொல்லவே
எளிமையாய் நடந்த தெய்வம்!
எங்கெலாம் அன்பர்கள் நினைப்பரோ அங்கெலாம்
ஏற்றமுற வந்த தெய்வம்!
பிச்சையெடுத் துண்டாலும் அருட்பிச்சை வழங்கியே
பெருமையாய் வாழ்ந்த தெய்வம்!
பீடுபெறும் விராலிமலை நீடுபுகழ் பெற்றிடப்
புகலிடம் கொண்ட தெய்வம்!
அச்சமெனை நாடாமல் அருளெனை நோக்கவே
அநுதினம் ஆண்ட தெய்வம்!
அடியவர்கள் சிறந்தோங்கு கோட்டையூர் எழுந்தருளும்
ஆறுமுக சாமி ஐயா! 2

சின்னவரும் பெரியவரும் உனதுபுகழ் ஏத்திடச்
செகத்தினில் நின்ற தேவா!
சிறுமதலை எனவந்து அருள்மொழிகள் பலபகரும்
சிவமான இனிய நாதா!
முன்பிறந்த நாயகியாம் மூதேவி வாசத்தை
முகமலர்ந் தேற்ற தேவா!
முருகனருள் பெற்றுயர் விராலிமலை தன்னிலே
முத்திநிலை சொற்ற கோவே!
அன்னையென அப்பனென அன்பாகி உலகத்தை
அநுதினம் காக்கும் ஐயா!
அடியவரின் உள்ளத்தை ஆட்கொள்ள எழுந்தருளும்
ஆறுமுக சாமி ஐயா! 3

இழிவான பொருளென்ன எல்லோரும் நீக்கினால்
இனிப்பாக எண்ணும் நாதன்!
இவ்வுலக மக்களின் நலங்காண எண்ணியே
இணையிலாத் துன்பம் ஏற்றோன்!
பழியான எச்செயலும் பார்வையால் போக்கியே
பரிசுத்த மாக்கும் ஐயன்!
பழனிமலைப் போகரின் பட்டறிவு தாங்கியே
பாரினில் வாழ்ந்த தூயோன்!
அழகான மாளிகைகள் அன்புநிறை உள்ளங்கள்
அவற்றினால் சீர்த்தி மிக்க
அறம்வளரும் திருநகராம் கோட்டையூர் எழுந்தருளும்
ஆறுமுக சாமி ஐயா! 4

வருவதும் போவதும் வாழ்க்கையே ஆமெனில்
வாழ்வதால் என்ன நோக்கம்?
வரவுவரு வழியையும் செலவுசெயு முறையையும்
வகுப்பதே வாழ்க்கை யாமோ?
பொருளென அறிவினுள் பொருந்தியே நிற்குமோர்
புண்ணியப் பேறு தன்னைப்
பொதுவென நோக்காமல் இதுவென அறிவதே
புன்பிறப் பொழிப்ப தாகும்!
அருளிது காணென ஆனந்த மானதோர்
அப்பொருள் சொற்ற வேதா!
ஐம்பத்தோ ரட்சரம் மந்திரமாய் நவின்ற
ஆறுமுக சாமி ஐயா! 5

குமரிமுனை மாயியும் கோவலூர் ஞானியும்
கொண்டாடுந் தேவ தேவா!
குழந்தையென முன்வந்து ஞானியென உள்நின்று
குருவாக ஆண்ட வேதா!
அமைதிநிலை காணாமல் அலைபாயும் உள்ளத்தை
அரைநொடியில் வென்ற நாதா!
அதுதெய்வம் இதுதெய்வம் எதுதெய்வம் என்னவே
அறியாமல் திகைத்தபோது
சமநிலையில் வாழ்கின்ற உள்ளமே தெய்வமாய்ச்
சாற்றிய ஞான குருவே
சாகா வரம்பெற்ற சச்சிதானந்தமே!
ஆறுமுக சாமி ஐயா! 6

நாயாகிப் பேயாகிப் பகலென்றும் இரவென்றும்
நாடாமல் திரிந்த தேவே!
நல்லவரின் உள்ளத்தில் சொல்லாமல் குடிகொள்ளும்
நலமான அன்பர் கோவே!
தாயாகிக் குடிமக்கள் நோயுற்ற துன்பங்கள்
தான்கொண்டு தீர்த்த வேந்தே!
தருமங்கள் செய்வாரின் கருமங்கள் எல்லாமும்
தழலினில் தீய்த்த மன்னா!
சேயாக எனையாண்டு கோட்டையூர் எழுந்தருளிச்
சித்துவிளை யாடும் அப்பா!
செகமெலாம் கொண்டாடும் தேவனே! வேலனே!
ஆறுமுக சாமி ஐயா! 7

என்னைநீ ஆண்டதும் உன்னைநான் கண்டதும்
எவ்வாறு பாடு வேனோ!
என்மனைவி என்மக்கள் என்சுற்றம் எல்லாமும்
எப்போதும் வாழ்த்து வோமே!
உன்னைநீ உணர்ந்தபின் உண்மைநிலை காணென்ற
உபதேசம் மறக்க லாமோ?
உன்திறம் சொல்லுதல் உன்புகழ்பாடுதல்
ஒருநாவால் முடிவ தொன்றோ?
பின்னரும் உலகினில் தோன்றுவேன் என்றனை
பித்தனேன் காணு வேனோ?
பெருமைபெற ஆட்கொண்ட பேரருள் ஞானியே
ஆறுமுக சாமி ஐயா! 8

தாயாரின் உதரத்தில் ஐயிரண்டு திங்களாய்த்
தடுமாறி வெளியில் வந்தால்
தரணியிற் படுதொல்லை கொஞ்சமோ நஞ்சமோ
தமிழினால் நவில லாமோ!
சேயாகித் துயிலாகி நோயாகிப் போனதோ
சென்மத்தில் மூன்று பாகம்!
சிறப்பான ஓர்பாகம் அதுவுமோ நம்மையே
சிக்கலில் தவிக்க வைக்கும்!
பேயனேன் எப்போது பிறவியின் பயனினைப்
பெறுவனோ அறிந்தி லேனே!
பிரணவம் உணர்த்திய பேசரிய தேவனே!
ஆறுமுக சாமி ஐயா! 9

நல்லவர்கள் எனைநாட அல்லவர்கள் பகைமாற
நடக்கும்முறை காட்ட வேண்டும்!
நானென்னும் அகங்காரம் எனதென்னும் மமகாரம்
நாடாமல் அருள வேண்டும்!
அல்லென்றும் பகலென்றும் பாராமல் எனைநாடும்
அன்பருக் குழைக்க வேண்டும்!
அறிவாலும் அன்பாலும் எல்லோரும் போற்றவே
அநுதினம் வாழ வேண்டும்!
சொல்லாமல் நீசொன்ன சூட்சுமப் பொருளைநான்
சுகம்பெறக் காண வேண்டும்!
சோதியாய் எழுந்தருளும் தூயனே! நேசனே!
ஆறுமுக சாமி ஐயா! 10

என்றென்றும் மாறாத அன்புநிறை வழியிலே
என்வாழ்வு செல்ல வேண்டும்!
எப்போதும் அடியாரின் திருவடி நீழலில்
இன்பமாய் வாழவேண்டும்!
துன்மார்க்க ரானாலும் துன்பமென வந்திட்டால்
துவள்கின்ற நெஞ்சு வேண்டும்!
துயரங்கள் மலையாக வந்தாலும் அருளினால்
தூசாக்கும் வலிமை வேண்டும்!
நன்மார்க்க நெறிவாழும் நகரத்தார் நிறைகின்ற
நலமான கோட்டை யூரில்
நயப்புடன் சமாதிகொண் டருள்கின்ற சித்தனே!
நாதனே! ஆறுமுக தேவே! 11

பணிக்காக வாழ்கின்ற பக்திமனம் என்றென்றும்
பரமனே வாய்க்க வேண்டும்!
பழியாளர் கோடிபணம் குவித்தாலும் விரும்பாத
பண்பான திறமை வேண்டும்!
அணியாக எதிர்த்தாலும் அறநெறியில் மாறாத
ஆற்றலெனக் கருள வேண்டும்!
அண்டினார் தமக்கெலாம் அணுவேனும் நன்மையே
அநுதினம் செய்ய வேண்டும்!
தணியாத காதலால் தனவணிகர் வாழ்கின்ற
தருமம்நிறை கோட்டை யூரில்
சமாதி கொண் டெழுந்தருளி சகலமும் தந்தருளும்
சக்தியே! ஆறுமுக தேவே! 12

வஞ்சனைகள் செய்வாரின் அருகினில் செல்லாத
வரமெனக் கருள வேண்டும்!
வயதான காலத்தும் தயவொன்று நாடாத
வாழ்க்கையே அமையவேண்டும்!
தஞ்சமென வருவாரின் குறையினைக் களையவோர்
தரமெனக் கருள வேண்டும்!
தருமநெறி பொய்க்காமல் அதர்மநெறி நிலைக்காமல்
தக்கநெறி உணர்த்த வேண்டும்!
பஞ்சமது வந்தாலும் செல்வமது குறையாமல்
பசிபோக்கும் நகரமக்கள்
பசுமையாய் வாழ்கின்ற கோட்டையூர் எழுந்தருளும்
பரமனே! ஆறுமுக தேவே! 13

நாளொன்று போனாலும் நினைவொன்று மாறாமல்
நானென்றும் வாழ வேண்டும்!
நாயென்றும் பேயென்றும் நமரங்கள் சொன்னாலும்
நாதனை நினைக்க வேண்டும்!
கோளென்ன வந்தாலும் கூற்றென்ன செய்தாலும்
குலையாத நெஞ்சு வேண்டும்!
கோணாத மனையாளும் குறையாத மக்களும்
கூடியே நிற்க வேண்டும்!
ஆளென்னத் தந்தாலும் ஆணவம் இன்றியே
அடக்கமாய் ஆள வேண்டும்!
அழகுதவழ் சக்திநகர் அருகினில் உறைகின்ற
ஐயனே! ஆறுமுக தேவே! 14

மரணத்தை அறிந்தவா! மாயவுடல் அடக்கவோர்
மண்ணினை உரைத்த தேவா!
மனிதவுடல் கொண்டுநீ சித்துவிளை யாடிய
மகிமையைப் பாடுவேனா!
நரகத்தை உலகத்தின் வாழ்க்கையில் கண்டவர்
நலமுடன் வாழ ஆண்டாய்!
நன்றான மெய்ப்பொருள் ஒன்றான தெதுவென்று
நயனத்தால் அறிவு நுத்தினாய்!
வரத்தினால் சிறந்தவர் வளத்தினால் நிறைந்தவர்
வாழ்கின்ற கோட்டையூரில்
வனப்பான சமாதிகொண் டருள்கின்ற நாதனே!
வாணனே! ஆறுமுக தேவே! 15

கண்டவரை அன்பாலே சாந்தமென ஈர்க்கின்ற
கருணைபொழி ஈர விழிகள்!
காலளவு நெடுஞ்சட்டை! கையளவு பிணிப்புண்ட
கனமான சடையின் கற்றை!
தண்டமொரு கையிலே அக்கமணி கழுத்திலே
தளராத மெய்யின் வித்தை!
தானாக வந்தன்றிப் பசிக்காகச் செல்லாத
தருமநெறி வாங்கு பிச்சை!
எண்டிசையும் நொடிப்பொழுதில் வலமாக வந்துமே
எளியனாய் வாழ்ந்த வாழ்க்கை!
அவையெலாம கொண்டவா! இன்றெனை ஆண்டவா
ஈசனே! ஆறுமுக தேவே! 16

அட்டமா சித்தியால் ஆனந்த வாரியை
அடியவர் உளம்நிரப்புவாய்!
ஆணவப் பேயினால் அதிகாரம் செய்யாமல்
அனுதினம் வாழ அருள்வாய்!
எட்டெட்டு வித்தையும் அறியாத மூலத்தை
இமைப்பொழுதில் அறிவு றுத்துவாய்!
எத்துன்ப மானாலும் உன்னிடம் முறையிடின்
எரிவீழ்ந்த பஞ்சு செய்வாய்!
தொட்டிட்ட பொருளெலாம் துலங்கவே காட்டுவாய்
துரிய நிலை கடந்த நாதா!
தொன்மைமிகு கோட்டையூர் நன்மைமிக எழுந்தருளும்
சோதியே! ஆறுமுக தேவே! 17

தருமநெறி பின்செல்ல அதர்மநெறி முன்செல்லத்
தடம்புரளும் மனித வாழ்க்கை
தயாவான தத்துவம் தங்குமிடம் இன்றியே
தரணியில் ஏங்கி நிற்கத்
கருமநெறி பொய்யென்று கண்டவழி மெய்யென்று
கயவர்கள் ஓங்கி நிற்கக்
காலத்தை நோவதா கடவுளை நோவதா
கருத்தின்றி மனிதர் வாட
உரியநெறி இதுவென்றும் உண்மைநெறி இதுவென்றும்
உணர்த்தியே நிறைந்த நாதா!
உயர்வான சக்திநகர் அருகினில் உறைகின்ற
ஒளியான ஆறுமுக தேவே! 18

நால்வேத நெறிகளும் சன்மார்க்க வழிகளும்
நவின்றவோர் மூல வித்தை
நாவினால் சொல்லாமல் அருளினால் உளத்தினில்
நன்குநீ பதிய வைத்தாய்!
பால்போலும் மொழியினால் பனிபோலும் விழியினால்
பாவியேன் உளம்புகுந்தாய்!
பாதார விந்தத்தை நாவாரப் போற்றுதல்
பைந்தமிழ்க் கேற்ற தாகும்!
சேல்போலும் விழியினார் வாள்வாங்கு தோளினார்
சிறந்தோங்கு கோட்டை யூரில்
சித்தமுடன் சமாதிகொண் டருள்கின்ற நாதனே!
சேயனே! ஆறுமுக தேவே! 19

வைகாசித் திங்களில் விசாகநன் னாளினில்
வாழ்நாள் முடிப்ப னென்றே
வரலாறு சொன்னது போலவே அடங்கினாய்
வாழ்நாளில் மறப்ப தொன்றோ!
பைசாச வித்தையோ பொய்யான சித்துவோ
பயிற்றியே வாழாத தேவா!
பச்சிளங் குழவிக்கும் குழவியாய் வாழ்ந்திட்ட
பரமனே தூய நாதா!
மெய்யான அன்பர்கள் ஒன்றாக வந்திங்கு
மேலான பூசை செய்ய
மேவியே கோட்டையூர் சமாதிகொண் டருள்கின்ற
நேயனே! ஆறுமுக தேவே! 20

ஆறுமுக சாமிஓம் ஆறுமுக சாமி
ஆண்டவனாய் வந்தவனே ஆறுமுக சாமி
வேண்டுவரம் தந்தருள்வாய் ஆறுமுக சாமி
வினைகளையே பொசுக்கிடுவாய் ஆறுமுக சாமி

சமாதிநிலை அறிந்தவனே ஆறுமுக சாமி
சக்திநகர் ஆண்டவனே ஆறுமுக சாமி
நான்சமாதி கொண்டஇடம் ஆறுமுக சாமி
நகரமென உரைத்தவனே ஆறுமுக சாமி

மூதேவி உபாசனையே ஆறுமுக சாமி
முகமலாந்து ஏற்றவனே ஆறுமுக சாமி
யார் துயரம் சொன்னாலும் ஆறுமுக சாமி
தார்போலப் பெற்றவனே ஆறுமுக சாமி

ஆண்டியென வந்தவனே ஆறுமுக சாமி
ஆண்டவனாய் நின்றவனே ஆறுமுக சாமி
எச்சிலிலை தின்றவனே ஆறுமுக சாமி
என்றைக்கும் மெய்ப்பொருளே ஆறுமுக சாமி

ஐம்பத்தோ ரட்சரமே ஆறுமுக சாமி
அறிவினுச்குத் தந்தவனே ஆறுமுக சாமி
விராலீமலை குகையினிலே ஆறுமுக சாமி
வேல்வைத்து வழிபட்டாய் ஆறுமுக சாமி

விராலிமலை வீற்றிருக்கும் ஆறுமுக சாமி
வினைகளைந்த சித்தனவன் ஆறுமுக சாமி
வெயிலென்ன மழையென்ன ஆறுமுக சாமி
விளையாட்டாய் ஏற்றிட்டாய் ஆறுமுக சாமி

உலகுய்ய வந்தவனே ஆறுமுக சாமி
உள்ளத்தில் நிறைந்தவனே ஆறுமுக சாமி
வாசலினைத் தேடிவந்தாய் ஆறுமுக சாமி
வாழ்வெல்லாம் நாடிநிற்பாய் ஆறுமுக சாமி

கோடிமக்கள் கூடிவந்து ஆறுமுக சாமி
குறைகளையப் பாடிடுவார் ஆறுமுக சாமி
மழைபொழிய வேண்டுமப்பா ஆறுமுக சாமி
மன்பதைகள் உய்யவேண்டும் ஆறுமுக சாமி

காடுவயல் விளைய வேண்டும் ஆறுமுக சாமி
கவலையெலாம் பறக்க வேண்டும் ஆறுமுக சாமி
சந்நதிக்கு வந்தாலே ஆறுமுக சாமி
சங்கடங்கள் தொலையுமப்பா ஆறுமுக சாமி

பால்பழங்கள் அபிஷேகம் ஆறுமுக சாமி
பக்தியுடன் நடத்துகின்றோம் ஆறுமுக சாமி
ஏறும்வழி காட்டிடுவாய் ஆறுமுக சாமி
எல்லாமும் உன்னருளே ஆறுமுக சாமி

காவியுடை தரித்தவரும் ஆறுமுக சாமி
காணவந்தார் உன்கோயில ஆறுமுக சாமி
என் மனைவி என்மக்கள் ஆறுமுக சாமி
எல்லாமும் உன்னுடைமை ஆறுமுக சாமி

கோட்டையூரில் எழுந்தருளும் ஆறுமுக சாமி
குலம்விளங்க அருள்பொழிவாய் ஆறுமுக சாமி
ஆறுமுக சாமிஓம் ஆறுமுக சாமி
ஆண்டவனாய் வந்தவனே ஆறுமுக சாமி

❊❊❊

